Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2023    தை 06    (20-01-1992)    திங்கட்கிழமை    ஓசை: 336

## மனித உரிமை மீறல்களை பிரிட்டன் ஊக்குவிப்பு

'பயங்கரவாத' நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் பிரித்தானியா விற்பனை செய்து அதன் மூலம் உலகெங்கும் மனித உரிமை மீறல்களுக்கு உதவியும் ஊக்குவிப்பும் வழங்கியதாக சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளது. இச் சபை விடுத்துள்ள பிந்திய அறிக்கையில் இக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடக்குமுறை வர்த்தகம் பிரித்தானியா லிமிடெட் என்ற தலைப்பின் கீழ் கடந்தபுதன்கிழமை இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தூக்குமேடை உபகரணங்கள், கால்விலங்குகள், மின்சார சித்திரவதைக் கருவிகள் ஆகியவற்றை பிரித்தானிய நிறுவனங்கள் விற்பனை செய்த பல சந்தர்ப்பங்களையும் இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

# அரசியல் தீர்வு இல்லையேல்

# நாடு பிளவுபடுவது உறுதி

## அரசுக்கு பேராசிரியர்கள் எச்சரிக்கை
## சோவியத் - யூகோ. புகட்டும் பாடம்

(கொழும்பு)

"இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் வழிமுறைகள் கைவிடப்பட்டு பிரச்சினை மேலும் சிக்கலடையுமானால் நாடு பிளவுபடுவது தவிர்க்கமுடியாதது ஆகிவிடும், இன்றைய உலக அனுபவமும் இதைத்தான் எடுத்தியம்புகிறது. சோவியத் யூனியனையும், யூகோஸ்லேவியாவையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்."

இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர்கள் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிகளுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

''அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் நன்மைகளும் இருக்கலாம் தீமைகளும் இருக்கலாம். ஆனால் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வுகாணும் அணுகுமுறையை முற்றாக நிராகரிப்பது நாட்டிற்கு பேரழிவை ஏற்படுத்தும்'' என்று இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முழுமையான அதிகாரப் பரவலாக்கம் கொண்ட சுயாட்சி அல்லது சமஷ்டி என்ற அடிப்படையில் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு காலதாமதமின்றி தீர்வுகாண வேண்டுமென அரசாங்கத்தையும் எதிர்க்கட்சிகளையும் இந்தப் பேராசிரியர்கள் கோரியுள்ளனர்.

விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் வாழும் பொது மக்கள் இலங்கையின் இனப் பிரச்சினைக்குச் சுமுகமான முறையில் அரசியல் தீர்வொன்றைக் காண விரும்புகிறார்கள். இனப்பிரச்சினை குறித்து வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டுள்ள தலைவர்களும், பேச்சாளர்களும் இந்தப் பிரச்சினையில் சாதாரண மக்களின் உணர்வைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

அனைத்துச் சமூகங்களுக்கும் அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் படவேண்டும் என்ற கோட்பாட்டிற்கு இசைவாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற நிலைப்பாட்டைச் சில தேசியவாதிகளும், சமயத் தலைவர்களும் நிராகரித்ததன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## செல்லச்சாமி - மூப்பனார் இல. தமிழர் பற்றி பேச்சு

(கொழும்பு)

இ. தொ. கா. வின் செயலாளர். இராஜாங்க அமைச்சர் எஸ். செல்லச்சாமி இனப்பிரச்சினை விவகாரம் குறித்து தமிழக இந்திரா காங்கிரஸ் பிரமுகர்களில் ஒருவரான கறுப்பையா மூப்பனாருடன் பேச்சுவார்த்தை நடத்தினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தமிழகம் சென்றிருந்த செல்லச்சாமி இ. தொ. கா. முன் வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக பேசினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பாராளுதெரிவுகுழுவிலிருந்து தொண்டமானை நீக்குக

## -ஜனாதிபதியிடம் திரிநிக்காய கோரிக்கை

(கண்டி)

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கானவழிவகைகளை ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவிலிருந்து அமைச்சர் எஸ். தொண்டமானை நீக்கும்படி கந்துறட்ட திரிநிக்காய பிக்கு சங்கமய என்ற மூன்று பிரிவுகளை உள்ளடக்கிய மத்திய மலைநாட்டுப் பிக்குகள் சங்கம் கோரியுள்ளது.

இப்போதைய தேசியப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு தொண்டமான் ஈழ அரசு ஒன்றை சிபார்சுசெய்து தவறான வழிக்கு இட்டுச் செல்கிறார் என்றும் ஆகவே அவரை மங்கள முனசிங்கா பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைக்

அத்துடன் இலங்கையில் தமிழ் மக்கள் மாத்திரம் வாழும் பிரதேசங்களில் அரசு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவீச்சால் கொல்லப்படுவது

## வடபகுதி படையினருக்கு விபஸிதேரோ நேரில் ஆசி

(கொழும்பு)

மல்வத்த நாயக்கர் யாழ்ப்பாணம் சென்று வடபகுதியில் பாதுகாப்பு படையினருக்கு ஆசி வழங்கியுள்ளார். வட பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரட்ண ஆகியோரின் ஏற்பாட்டில் மல்வத்த பீட மகாநாயக்கர், ரம்புக்வெல விபஸிதேரர் உட்பட மற்றும்பல பிக்குமார்களும் தியவரன நிலமே நிறஞ்சன் விஜயரட்ணாவும் வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்கு நேரில் சென்று நேற்று முன்தினமும், அதற்கு முதல் நாளுமாக இருநாட்கள் ஆசி வழங்குவதில் ஈடுபட்டிருந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வி.எஸ்.ஓவிடம் ஆயுதங்கள் மீளப் பெறப்பட்டன

(கொழும்பு)

விசேட பொலிஸ் நடவடிக்கைப் பிரிவான வி.எஸ்.ஓவிடமிருந்து ஆயுதங்கள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டுள்ளன என்றும், இப்பணியகத்தின்தலைவர் பிரேமதாசா உடுகம்பொல மூன்றுமாதகாலகட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார் என்றும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் பணியகத்தின் நடவடிக்கை குறித்து எழுப்பப்பட்ட புகார்களை அடுத்தே ஆயுதங்கள் களையப்பட்டது; உடுகம்பொலவிற்கு கட்டாய லீவு அளிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உடுகம்பொலவிற்குப் பணியகம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் முடிவதற்கு ஒருநாள் இருக்கையில் அதாவது கடந்த வியாழக்கிழமை கட்டாய லீவு பெறுவதற்கான அறிவுறுத்தல் பாதுகாப்பு அமைச்சினால் அனுப்பப்பட்டது என்றும்,

இதனைத்தொடர்ந்து இவர் மூன்று மாதகால கட்டாய லீவில் அனுப்பப்பட்டார் என்றும், லீவு முடிவடைந்ததும் இவர் ஓய்வுபெறுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியகத்தின் நடவடிக்கைகள் பற்றியும், உடுகம்பொல பற்றியும் சிரேஷ்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## செனட்டர் பிரெஸ்லெர் களுத்துறைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையில்சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க செனட்டர் லாறி பிரெஸ்

விசாரித்து அறிந்தார். இந்த இடம்பெயர் சேவையின்போது காணாமல் போனோர் பற்றியும், வன்செயல்களின்போது

''அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் நன்மைகளும் இருக்கலாம் தீமைகளும் இருக்கலாம். ஆனால் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வுகாணும் அணுகுமுறையை முற்றாக நிராகரிப்பது நாட்டிற்கு பேரழிவை ஏற்படுத்தும்'' என்று இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முழுமையான அதிகாரப் பரவலாக்கம் கொண்ட சுயாட்சி அல்லது சமஷ்டி என்ற அடிப்படையில் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு காலதாமதமின்றி தீர்வுகாண வேண்டுமென அரசாங்கத்தையும் எதிர்க்கட்சிகளையும் இந்தப் பேராசிரியர்கள் கோரியுள்ளனர்.

விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் வாழும் பொது மக்கள் இலங்கையின் இனப் பிரச்சினைக்குச் சுமுகமான முறையில் அரசியல் தீர்வொன்றைக் காண விரும்புகிறார்கள். இனப்பிரச்சினை குறித்து வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டுள்ள தலைவர்களும், பேச்சாளர்களும் இந்தப் பிரச்சினையில் சாதாரண மக்களின் உணர்வைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

அனைத்துச் சமூகங்களுக்கும் அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் படவேண்டும் என்ற கோட்பாட்டிற்கு இசைவாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற நிலைப்பாட்டைச் சில தேசியவாதிகளும், சமயத் தலைவர்களும் நிராகரித்ததன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டமானை நீக்குக

## -ஜனாதிபதியிடம் திரிநிக்காய கோரிக்கை

(கண்டி)

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கானவழிவகைகளை ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவிலிருந்து அமைச்சர் எஸ். தொண்டமானை நீக்கும்படி கந்துறட்ட திரிநிக்காய பிக்கு சங்கமய என்ற மூன்று பிரிவுகளை உள்ளடக்கிய மத்திய மலைநாட்டுப் பிக்குகள் சங்கம் கோரியுள்ளது.

இப்போதைய தேசியப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு தொண்டமான் ஈழ அரசு ஒன்றை சிபார்சுசெய்து தவறான வழிக்கு இட்டுச் செல்கிறார் என்றும் ஆகவே அவரை மங்கள முனசிங்கா பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைக் கோரும் தீர்மானம் ஒன்றை மேற்படி சங்கமய ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

அத்துடன் இலங்கையில் தமிழ் மக்கள் மாத்திரம் வாழும் பிரதேசங்களில் அரசு

(4 ஆம் பக்கம் பார்க்க)

அனுப்பப்பட்டது என்றும்,

இதனைத்தொடர்ந்து இவர் மூன்று மாதகால கட்டாய லீவில் அனுப்பப்பட்டார் என்றும், லீவு முடிவடைந்ததும் இவர் ஓய்வுபெறுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியகத்தின் நடவடிக்கைகள் பற்றியும், உடுகம்பொல பற்றியும் சிரேஷ்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

# குண்டுவீச்சால் கொல்லப்படுவது புலிகளல்ல, அப்பாவி மக்களே

## அழிவைத் தவிர்க்கவே முயன்றேன் - தொண்டா

(பண்டாரவளை)

இன்று அரசாங்கம் மேற்கொள்ளும் விமானக் குண்டு வீச்சால் விடுதலைப் புலிகளை விடஅப்பாவிப் பொதுமக்களே அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றனர். பெறுமதியான உயிர்கள் பலியாகின்றன. இதனைப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் உணர வேண்டும். இவ்வாறு அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

பதுளை மாவட்டத்தில் இருந்து புதிதாக பாராளுமன்றம் சென்றுள்ள ரி. வி. சென்னனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்தினால் பெறுமதிமிக்க பல உயிர்கள் பலியாகின்றன. நாட்டின் பொருளாதாரம் சீர்குலைகின்றது. இதனைத் தாய் நாட்டின் மீது பற்றுள்ள எவரும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நாட்டில் அமைதியும் சுபீட்சமும் ஏற்படவேண்டும் என்பதற்காகவே நான் புலிகளுடன் பேச்சுக்குத் தயாரானேன்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள முற்பட்டிருக்கும் எனக்கு சில சக்திகள் எச்சரிக்கைகள் விடுத்துள்ளன. அந்த எச்சரிக்கைகளுக்கு அடிபணியவோ பயப்படவோ நான் தயாராக இல்லை. எச்சரிக்கை யாருக்கு விடுக்கவேண்டுமோ அவர்களை எச்சரிக்கும்படி நான் கூறுகிறேன். கடந்த 50 வரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக் கொடியுடன் மரண ஊர்வலங்கள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ளவர்கள் தமது வீடுகளில் வெள்ளைக் கொடிகள் கட்டியிருப்பதுடன் குடும்பத்தலைவர் அல்லது குடியிருப்பவர்களில் மூத்தவரின் பெயர் எழுதப்பட்ட அட்டை ஒன்றினை வீட்டின் முன்றலில் தொங்கவிட வேண்டும் என படையினர் உத்தர விட்டுள்ளனர். அத்துடன் மரண வீடு போன்ற இடங்களில் பெரிய அளவிலான வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட வேண்டும் எனவும் பிரேத ஊர்வலத்தின் போது கொடியை பிடித்துச் செல்ல வேண்டும் எனவும் உத்தர விடப்பட்டுள்ளதாம். (22)

## மருத்துவ வசதியின்றி புங்குடுதீவு வயோதிபர்மடிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் இருந்து நோயாளிகள் இருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்துள்ளனர். புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மருதப்பு சிவசுப்பிரமணியம் (வயது 42) 3 ஆம் வட்டாரம் வீரம்புளியடியைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை நாகராசா (வயது 52) ஆகிய இருவருமே இவர்களாவர்.

ஆஸ்துமா நோயாளிகளான இவர்கள் கடந்த புதன் கிழமை (பொங்கல் தினத்தன்று) புங்குடுதீவில் இருந்து புறப்பட்டு காரைநகர் கடற்படை முகாமில் மூன்று நாட்கள் தங்கியிருந்த பின் நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## செனட்டர் பிரெஸ்லெர் களுத்துறைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையில்சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க செனட்டர் லாறி பிரெஸ்லர் களுத்துறையில் நடைபெற்ற இடம் பெயர் சேவையைப் பற்றி நேரில் சென்று விசாரித்து அறிந்தார். இந்த இடம்பெயர் சேவையின்போது காணாமல் போனோர் பற்றியும், வன்செயல்களின்போது பாதிக்கப்பட்டமை பற்றியும் பலர் முறைப்பாடுசெய்திருந்ததாக தெரிய வருகிறது. திரு. லாறி பிரெஸ்லருடன் அவரது தூதுக் குழுவினரும்சென்றிருந்தனர்.

அமெரிக்க செனட்டரான லாறி பிரெஸ்லர் அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கான கொள்கை வகுப்பாளராகப் பணியாற்றுகிறார் என்பதும்,அண்மையில் பாகிஸ்தான், இந்தியா ஆகியவற்றிற்கு விஜயம் செய்துவிட்டு கொழும்பு வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இராணுவ நடவடிக்கையால் நிவாரணப்பணி பாதிப்பு

### போரூட் செயலாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

''சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் வடகிழக்குப் பகுதிகளில் எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மற்றும் நிவாரண புனர்வாழ்வுப் பணிகள் பெரிதும் பாதிப்படைகின்றன''.

இவ்வாறு போரூட் நிறுவனத்தின் செயலாளர் நாயகம் திரு. டேர் ஜி ஹெக்கிர்ணஸ் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறும் போது எவ்வாறான தடங்கல்களும் ஏற்படினும் தமது நிறுவனத்தின் சேவைகளை இப்பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்வதற்கு தாம் உறுதியுடன் இருப்பதாக தெரிவித்தார். இதற்குரிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## சிறிலங்காவிற்கு இந்தியா 12 கோடி ரூபா உதவி

(டில்லி)

இலங்கையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளைப் புனரமைப்பு செய்வதற்காக அந்நாட்டிற்கு பன்னிரண்டு கோடி ரூபய் கடன் வழங்கும் திட்டமொன்றை இந்தியா பரிசீலித்து வருவதாக கொழும்பில் இந்திய தூதரக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மேலும் கொழும்பில் ரயில்வே பாதைக்குப் பயன்படும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவி குத்திக் கொலை

(குருநாகல்)

பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த மாணவியொரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாளையிலிருந்து...

### "தொண்டாவின் சமரஸ முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்"

இன்றைய அரசியல் சூழ்நிலையை விளக்கி

திரு. அன்ரன் பாலசிங்கம் எழுதும்

தொடர் கட்டுரை

## 150பேர் இன்று நெடுந்தீவு செல்வர்

(சுண்டிக்குளி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நெடுந்தீவுக்கு 150 பொது மக்களை அழைத்துக் கொண்டு இன்று புறப்படுகின்றனர்.

மேலும் தெரியவருவதாவது நெடுந்தீவுக்குப் போகும் மக்களின் பயணப் பொதிகள் சர்வ

(4ஆம் பக்கம் பார்க்க)

# வளலாயில் இராணுவம் மீது புலிகள் திடீர்த் தாக்குதல்

## 5 படையினர் பலி; ஆயுதம் மீட்பு

(வளலாய்)

வளலாயில் விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை ஏழு மணியளவில் மேற்கொண்ட திடீர்த் தாக்குதல் ஒன்றில் ஐந்து சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

வளலாயில் சிறிலங்கா இராணுவகாவலரண் ஒன்றிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது காவலரணிலிருந்து 100 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடாத்தினர். தாக்குதல்கள் சுமார் நான்கு நிமிடநேரம் இடம் பெற்றன. இத்தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் உயிரிழந்தனர். ஏனையோர் காயங்களுடன் காவலரண்களுக்கு தப்பியோடிவிட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிரெஸ்லர் வார இறுதியில் கொழும்பு வருவார்

[கொழும்பு]

அமெரிக்க செனட்டர் லாரி பிரெஸ்லர் இவ்வார இறுதியில் கொழும்பு வருவார் என அமெரிக்க தூதுவராலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவரின் வருகைக்கான காரணங்களோ, சரியானகாலமோ இன்னமும் தெரிவிக்கப்படவில்லை.

அவர் இங்கு வருகை தந்தால் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவையும் சிரேஷ்ட அமைச்சர்களையும் சந்திக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவரின் இரண்டு வார சுற்றுப் பயணத்தில் இந்தியா, பாகிஸ்தான், சிறிலங்கா என்பன இடம் பெற்று இருக்கின்றன எனத் தெரியவருகிறது.

இந்திய விஜயத்தின் போது இவர் இந்தியாவின் பிரதமர் உட்பட பல உயர் தலைவர்களையும் சந்தித்த போதும் பாகிஸ்தானின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இவரைச் சந்திக்க மறுத்துவிட்டமை தெரிந்ததே.

ஆசியப் பிராந்தியத்தில் அணுஆயுத பரவலாக்கத்தை தடுக்கும் திட்டத்தில் மிக முக்கிய பங்கை லாரி பிரெஸ்லர் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

## இரண்டாம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும்

** ** ** ** **

## விதிமுறைகளும்

** ** ** ** ** ** ** **

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் இரண்டாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

★ கருத்துப் படங்கள் (Cartoon)
★ சிறுகதை
★ கவிதை

### போட்டியில் கலந்துகொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ. மீ X 12 செ. மீ. அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்,

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தில் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத்

JAFFNA MUNICIPAL COUNCIL

யாழ்ப்பாண மாநகரசபை

பொது மக்களுக்கு

## ஓர் முக்கிய அறிவித்தல்

யாழ். நகர மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் சுகாதார சீர்கேடுகளை விளைவிப்போர் மீது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ரூபா 500/- க்கு மேற்படாத தண்டம் விதிக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

மாநகர சபையின் சுகாதார சேவை சிறப்புற நகர மக்கள் புரிந்துணர்வுடன் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

01. கழிவு நீரோடும் வாய்க்கால்களுக்குள் குப்பைகளைப் போடுதல் அல்லது வாய்க்கால்களை மூடி கட்டிடங்களை நிர்மாணித்தல்.
02. வீதிகளில் குப்பைகளைப் போடுதல்.
03. வெற்றுக் காணிக்குள் அல்லது வளவுகளுக்குள் செடிகள், பற்றைகளை வளரவிடுதல், நீர்தேங்கி நிற்கும் வகையில் பாவனைக்குதவாத பழைய பொருட்களைக் குவித்து வைத்திருத்தல், குண்டு குழிகளை மூடாது வைத்திருத்தல்.
04. நாய், ஆடு, மாடு, பன்றி போன்றவற்றை கட்டாக்காலியாக அலையவிடுதல். (பிடிக்கப்படும் கட்டாக்காலிகளைப் பராமரிக்கும் செலவும் தண்டத்துடன் சேர்த்து அறவிடப்படும்.)

மாநகர ஆணையாளர்,
மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம் 10-01-1992. (சி/3773)

கடவுள் துணை

## அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

இச்சங்கம் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் நிவாரண புனர் வாழ்வு, புனர் நிர்மாண பணிகளில் ஈடுபட திருவருள் பாலித்துள்ளது.

இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் பின்வரும் விலாசங்களில் தங்களது அங்கத்தவர் இலக்கம், தற்போதைய சரியான விலாசம் ஆகிய விபரங்களை கடித மூலம் அறியத்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் தங்கியிருப்போர்:-
திரு சி.க.வேலாயுதபிள்ளை, C/o சர்வோதயம் 22, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

2. கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியிருப்போர்:-
திரு. கா. நாகலிங்கம், iii உருத்திரபுரம்.

3. கீழ் மாகாணத்தில் தங்கியிருப்போர்:-
திரு. பொ. கந்தையா தனசக்தி, திருக்கோணமலை

4. ஏனைய மேல் மாகாணம், மலையகத்தில் தங்கியிருப்போர்:-

### ஆவணம் சமர்ப்பித்து நன்கொடை பெறவும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபையின் எல்லைக்குள் இருக்கும் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் அனைத்தும் அடுத்த மாத இறுதிக்குள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து கடந்த ஆண்டுக்கான நன்கொடைப்பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படி யாழ். மாநகர ஆணையாளர் கேட்டுள்ளார். [க]

### தையல்நாயகி பாலர் பாடசாலை

வண்ணை சிவன் ஆலய பரிபாலன சபையின் ஆதரவில் இன்று திங்கட்கிழமை முதல் அருள்மிகு தையல் நாயகி பாலர் பாடசாலையும், தையல்நாயகி தையற் பயிற்சி நிலையமும் ஆரம்பமாகவுள்ளன.

பரிபாலன சபையின் சமுதாயப்பணிக் குழுவினரின் முயற்சியால் நடைபெறவிருக்கும் பாடசாலையும், பயிற்சி நிலையமும் மாணவர்களின் வாழ்க்கை நிலைக்கு அமைய இலவசமாக நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேற்படி சபை தெரிவித்துள்ளது.

### ஆரம்பக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஆரம்பக் கூட்டம் வரும் சனிக்கிழமை 25 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற உள்ளது.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆசியுரையுடன் இக் கூட்டம் ஆரம்பமாகும்.

### நோர்மன் சுயசரிதம்


(புளோரிடா)

வளைகுடா யுத்தத்தை நடாத்திய அமெரிக்க ஜெனரல் நோர்மன் தனது சுயசரிதம் எழுத தொடங்கியுள்ளார். இதனை வெளியிட 50 இலட்சம் டாலர் முற்பணம் பெற்றுள்ளார்.

வளைகுடா யுத்தத்தின் பின் பொதுமக்கள் பார்வையில் மறைந்து ஓய்வு பெறும் இவர் தனது சுயசரிதையை எழுத முன்வந்துள்ளதாக தெரியவருகிறது.

## நினைவு கூருகின்றோம்...

1992 - 01 - 20



ராஜ்மோகன்

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் கரவெட்டியில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் போது சிறிலங்கா காவல் துறையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

**ராஜ்மோகன்** (சிவராமலிங்கம் ராஜ்மோகன் - தும்பளை, பருத்தித்துறை)

1986 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்ட உப்புவெளி, அல்லைத் தோட்டத்தைச் சேர்ந்த தமிழர், சாம்பல் தீவைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

1989 ஆம் ஆண்டு யாழ். சத்திரத்துச் சந்தியில் தேச விரோதிகளால் கொலை செய்யப்பட்ட

**ராஜன்** (கு. புவிராஜசிங்கம் - 562, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்)

மன்னார் சிலாபத்துறைப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்ட இதே இடத்தைச் சேர்ந்த ஒரு பெண் உட்பட 6 தமிழர்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் இந்தியப் படையினரின் காவலில் வைக்கப்பட்டிருந்து பின்னர் பேருந்து நிலையத்தில் சடலமாக கண்டெடுக்கப் பட்ட தமிழ் இளைஞன்

1990 ஆம் ஆண்டு மணியந்தோட்டத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கணேஸ்** (அழகரத்தினம் சத்தியேந்திரா-சுன்னாகம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/3807)

# ஓராம் ஆண்டு வீர அஞ்சலி

★ படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்,

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தில் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்பட மாட்டாது என்பதுடன் பிந்திக் கிடைப்பவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1992 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும் இரண்டாவதுஆண்டு நிறைவு விழாபோட்டியில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

★ ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு இரண்டாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப் போட்டி என கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி.
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## விக்னா கல்வி நிறுவனம்

5, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்
(A.L கலை, வர்த்தக வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**92** பிரிவு - 2
Day Classes

ஆரம்பம் :- 21-01-1992

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

பொருளியல் - திரு. கலாகரன்
வர்த்தகவியல் - திரு. ரட்ணம்
கணக்கியல் - திரு. S. K. பிரபாகரன்
அளவையியல் :- திரு. பிரபாகரன்

மற்றும் சகல பாடங்களும் நடைபெறும்

மு. குறிப்பு :- ஒவ்வொரு பாடங்களும் வாரத்தில் 5 மணித்தியாலம் நடைபெறும்

(சி 3812)

புனர் வாழ்வு, புனர் நிர்மாண பணிகளில் ஈடுபட திருவருள் பாலித்துள்ளது.

இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் பின்வரும் விலாசங்களில் தங்களது அங்கத்தவர் இலக்கம், தற்போதைய சரியான விலாசம் ஆகிய விபரங்களை கடித மூலம் அறியத்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் தங்கியிருப்போர்:-
திரு சி.க.வேலாயுதபிள்ளை, C/o சர்வோதயம்
22, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

2. கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியிருப்போர்:-
திரு. கா. நாகலிங்கம், iii உருத்திரபுரம்.

3. கீழ் மாகாணத்தில் தங்கியிருப்போர்:-
திரு. பொ. கந்தையா தனசக்தி,
திருக்கோணமலை

4. ஏனைய மேல் மாகாணம், மலையகத்தில் தங்கியிருப்போர்:-
டாக்டர் க. வேலாயுதபிள்ளை
3, வில்லி அவென்யூ கொழும்பு - 6

எல்லா சங்கத்தவர்களும் தொடர்பு கொண்டு ஒத்துழைப்புத் தாருங்கள். 1992 நடுப்பகுதியில் இச்சங்கத்தின் 43 ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சி. க வேலாயுதபிள்ளை
சங்கத்தலைவர்

19-1-92 (2120)

## 60ஆம் நாள் நினைவலைகள்

| வீரப் பிறப்பு | வீரச் சாவு |
|---|---|
| 14 | 22 |
| - | - |
| 08 | 10 |
| - | - |
| 1975 | 1991 |



### வீரவேங்கை தங்கன்

(செல்வரத்தினம் கருணகரன்)

பால்மணம் மாறாத பருவத்திலே
பள்ளியைமறந்து
உன் தந்தை தாய் சகோதரங்களை
மறந்து உன் இட்சியம்
நிறைவேறும் என்று கூறி களம்
புகுந்தாய் மாவீரன் தங்கனே
உன் இலட்சியம் நிறைவேற வேண்டுகின்றோம்

இவரை 20.01.92 அன்று
அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பி, தங்கைமார், உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் நினைவு கூருகின்றோம்

சங்கத்தா வயல்,
இயக்கச்சி,
(சி-3783)

குடும்பத்தினர்,
நண்பர்கள்

வளைகுடா யுத்தத்தைநடாத்திய அமெரிக்க ஜெனரல் நோர்மன் தனது சுயசரிதம் எழுத தொடங்கியுள்ளார். இதனை வெளியிட 50 இலட்சம் டாலர் முற்பணம் பெற்றுள்ளார்.

வளைகுடா யுத்தத்தின் பின் பொதுமக்கள் பார்வையில் மறைந்து ஓய்வு பெறும் இவர் தனது சுயசரிதையை எழுத முன்வந்துள்ளதாக தெரியவருகிறது.


கணேஸ் (அழகரத்தினம் சத்தியேந்திரா-சுன்னாகம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி /3807)

# ஓராம் ஆண்டு வீர அஞ்சலி





**லெப்டினன்ட் லவன்**
(த. யோகராசா - விளாத்திக்குளம், வவுனியா)

**லெப்டினன்ட் நிக்சன்**
(க. ஜெயதாசன் - விளாத்திக்குளம் ஓமந்தை, வவுனியா)

மண்ணுக்காய்
19.01.1991

மண்ணில்
03.1.1970

மண்ணுக்காய்
19.1.1991

இவர்கள் -
விடுதலை ஊற்றுக்கள்!
மௌனமாய் புறப்பட்ட இந்த
நீரூற்றுக்கள் - ஓர்
மகாநதியுடன் கலந்து
மகோன்னதம் பெற்றன.
அலைகள் ஆர்ப்பரிப்பதும்
அடங்குவதும் மட்டுமே
பார்வைக்குத் தெரியும்
ஆழம் புலப்படுவதில்லை.
தடைகளையெல்லாம் தகர்த்து
ஆழமான அமைதியுடன்
ஓடிக்கொண்டேயிருக்கும்
இந்த நதி.

-- வவுனியா மக்கள்

(2122)

## சிந்தனைக்கு

செய்தல் உன் கடனே - அறம்
செய்தல் உன் கடனே - அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே.
- சுப்பிரமணிய பாரதியார்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 20-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


# அகதிகளைக் காப்பது ஐ.நா.வின் கடமை

தமிழர் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத நிலையில், தொடர்ந்தும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், இந்தியாவில் தஞ்சம் கோரியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் சிறிலங்கா அரசாங்கத்துடன் சேர்ந்து மேற்கொண்டுள்ளது. இந்திய-சிறிலங்கா அரசாங்கங்களின் இந்த நடவடிக்கையை விடுதலைப்புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளதோடு, இது தொடர்பாக ஐ. நா. உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா ஐ. நா செயலாளர் நாயகத்திற்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தனது அரசியல் அணுகுமுறைகள், இராஜதந்திர, இராணுவ முயற்சிகள் தோல்வி கண்ட நிலையில் இந்தியா, இலங்கைத் தமிழ் அகதிகளை ஒரு பாரமாகக் கருதுகின்றது. இதனால், இச் சுமையை எப்பாடுபட்டாவது இறக்கிவிடப் பார்க்கின்றது இதற்காக சர்வதேச விதிமுறைகள்செயற்பாடுகள் என்பன பற்றி எதுவித அக்கறையும்காட்டாமல், அகதிகளை அனுப்பி விடுவதில் தீவிரமாகவுள்ளது. இதற்காக மிரட்டல்கள், மோசடிகள், ஏமாற்றுகள் என்பனவற்றையும் இந்தியா கையாண்டு வருகின்றது. இலங்கை திரும்ப விரும்பும் அகதிகள் தொடர்பாக இந்தியா தயாரித்த பட்டியல் ஒரு மோசடியானதுஎனப் பல மனிதநேய ஸ்தாபனங்களே தெரிவிக்கின்றன.

சிறிலங்காவைப் பொறுத்து, அகதிகளைப் பொறுப்பேற்பதினால், இலங்கை விவகாரத்தில் இருந்து இந்தியாவைத் தள்ளி வைக்கப் பார்க்கின்றது. அத்தோடு, வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகளுக்கென உதவி வழங்கும் நாடுகள் மறுத்துள்ள நிதி உதவிகளை இலங்கை திரும்பும் தமிழ் அகதிகளைக் காட்டிப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதேவேளை, சகல தமிழர் தரப்பும், அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது குறித்து தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளன. உலக மனித நேய அமைப்புக்கள் பல இந்தியாவின் இச்செயற்பாட்டைக்கண்டித்துள்ளன.

ஐ. நா. சாசனத்தின்படி தமது நாட்டில் அல்லது

# விடுதலைப்புலிகளின் பண்பாடு

(16-01-1992 அன்று வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி)

### போர் வீரன்

பழந்தமிழ் இலக்கிய நூலான புறநானூற்றில் உள்ள பாடல்கள் போர் வீரர்களையும், அவர்களுடைய வீரத்தையும் பற்றிக் கூறுகின்றன. ஒரு போர் வீரனை மற்றவர்கள்கடவுளெனவணங்கும் பண்பாட்டையே திராவிட இயக்கத்தினர் பண்டைய தனித்துவமான பண்பாடாக கொள்கின்றனர். இந்த நூலிலுள்ள அனேகமான பாடல்களில் வீரத்தின் பெருமையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

(தமிழர்களுடைய வரலாற்றின் ஒரு கட்டத்தில் பௌத்த சமயமும், ஜைனசமயமும் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக தமிழர்களிடையே நிலவியதாகவும், வீரத்துக்கு மதிப்புக்கொடுக்கும் பண்பாட்டை ஒடுக்கி அடக்குவதற்கு இந்த இரு மதத்தினரும் பல விதமான நடவடிக்கைகளை எடுத்ததாகவும் தெரிகின்றது.)

உண்மையான தமிழ் பண்பாடு எது என்பது பற்றி ஆராய்ந்த தமிழ்க் கல்விமான்கள், இரத்தம் சிந்தும் இந்த வீரப் பண்பாட்டை விரும்பாவிடினும் அவர்கள் அதை ஏற்க வேண்டியே இருந்தது. கிரேக்கர்களுடைய வீரகாவியங்களுடன் புறநானூற்றிலுள்ள பாடல்கள் ஒத்திருக்கின்றன என்பதைப் பலர் கூறியிருக்கின்றபோதிலும், பேராசிரியர் கைலாசபதி அவர்களே இது வீரர்கள் வாழ்ந்த காலத்தைக் குறிப்பிடுவதாக வலியுறுத்திக் கூறி மற்றைய நாடுகளின் புராதன வீர பண்பாடுகளுடன் ஒப்பிட்டிருக்கின்றார்.

1950 களிலும் 1960இன்முற்பகுதியிலும் தீவிரவாதப்போக்கையுடையதும், சமயசார்பற்றகொள்கையைக் கடைப்பிடிப்பதும், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதுமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கொள்கைக்கு புறநானூற்றுப் பாடல்கள் வாய்ப்பாக விருந்தன. புறநானூற்றில் காணப்படும் தமிழன் போல் தாங்களும் வாழவேண்டும் என்ற எண்ணம் இக்காலத்திலேயே தமிழர்களிடையே ஏற்பட்டது. தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகபுறநானூற்றில் காணப்படும் வீரஞ்செறிந்த வார்த்தைகளைக் கொண்ட ஒரு சொற்றொகுதியை தி.மு.க.உருவாகியது. இதன் காரணமாக இவ்வார்த்தைகள் தமிழ் மக்களிடையே பரவி இன்று அவர்களால் உபயோகப்படுத்தப்படுகின்றன. வீரமே தமிழ்மக்களுடைய தனிச்சிறப்பு பண்பு என்னும்உணர்வை அரசியலில் ஈடுபாடுள்ள தமிழ்த் தேசியவாதிகளிடையே திராவிட இயக்கம் ஏற்படுத்தியது. தங்களுக்கென தனிநாடு கோரும் தமிழ்மக்களுடைய போராட்டம் வெற்றியளிக்கவேண்டுமாகில் தமிழ் மக்களிடையே வீரம் என்ற உணர்வு வளர்க்கப்படல்வேண்டும்என தி.மு.க கருதியது.

இந்த உணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்டே கருணாநிதியின் சுயசரிதை முதலாவது பாகமும். மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவான நூல்களும் எழுதப்பட்டன. இமயமலை மீது தமிழ் மன்னர்கள் தங்கள் விருதுச் சின்னங்களைப் பொறித்து ஆட்சி செய்த காலத்துடன் இந்தக் காலத்தையும் நாவலாசிரியர்களும் புலவர்களும் ஒப்பிட்டுப் பெருமைப்பட்டுக் கொண்டனர். 'வீரஞ்செறிந்த சேரமன்னனின் தாக்குதலுக்குள்ளான ஆரியர்கள் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்' என ஒரு புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது. இதை மையமாக வைத்தே திராவிடக்கழகம், திராவிட முன்னேற்றக்கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய கட்சிகள் தங்கள் அரசியல் மேடைகளிலும், பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் பேசிவருகின்றார்கள்.

### நாம் இந்தியர்

இந்தக் கட்சிகளின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் நாம் இந்தியர் என்ற அரசியல் கொள்கையை இவர்களிடையே ஏற்படுத்த முயன்றும் அது முடியாது போய் விட்டது. விடுதலைப்புலிகளால் கொண்டாடப்பட்ட மாவீரர் தினமும் இந்த அரசியல் பண்பாட்டையே கருவாகக் கொண்டது. பூர்வீகக் குடிகளான ரியூட்டோனியரின் (Tuetonic Tribes) வீரம் நிறைந்த பண்பாட்டை கூறும் மொழியே ஜெர்மனியத் தேசிய வாதத்திற்கு காரணமாகும்.

திரு. யோகி அவர்கள் மாவீரர் தினத்தை முன்னிட்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றியபோது, நாங்கள் காவடி எடுக்கின்றோம், கோவில்களில் மணி அடிக்கின்றோம், கடவுளுக்கு விளக்கு ஏற்றுகின்றோம். இதனால் நாம் பெற்ற பலன் யாது? எங்களுக்குத் தமிழர் என்ற உணர்வே முதலில் இருத்தல் வேண்டும். அதற்குப் பின்னரே மதம். எங்கள் கண்களுக்குப் புலப்படாத கடவுளை நாம் வணங்குகின்ற அதேவேளையில் எமது மக்களுக்காகவும் எமது மண்ணுக்காகவும் போராடி வீரச்சாவை தழுவிக் கொண்ட போராளிகளான வீரவேங்கைகளை நினைவுபடுத்தி அவர்களை நாம் ஏன் கௌரவிக்கக்கூடாது? நாங்கள் விளக்குகளை ஏற்றி, மணிகளை அடித்து, வீரத்துடன் போரிட்டு சாவை தழுவிக் கொண்ட அவர்களை ஏன் நாம் நினைவுபடுத்தக்கூடாது எனக் குறிப்பிட்டார்.

''சாதம் அர்ப்பணித்து வணங்கப்படும் கடவுள்கள் எங்களிடையே இல்லை. புறமுதுகு காட்டாது வீரத்துடன் பகைவர்களுடனும், அவர்களுடைய கூரிய தந்தங்களையுடைய யானைகளுடனும் போரிட்டு மாண்ட வீரர்களுடைய கற்சிலைகளையே நாங்கள் வணங்குகின்றோம்.'' என புறநானூற்றிலுள்ள 335-வது பாடல் கூறுகின்றது.

விடுதலைப் புலிகள் பின்பற்றும் வீரப் பண்பாடு, வீரம் பற்றிக் கூறும் பழைய தமிழ் நூல்களை அவர்கள் படித்ததின் காரணமாக ஏற்பட்ட விளைவு என நான் கூறவரவில்லை. ஆனால் அவர்களால் பின்பற்றப்படும் இந்தப் பண்பாடு எப்படியாக பரந்த திராவிட இயக்கத்திலிருந்து வந்ததென்பதையும், அது எப்படி விடுதலைப்புலிகள் வளர்க்கும் வீரப்பண்பாட்டை ஒத்திருக்கின்றது என்பதையுமே கூறுகின்றேன்.

திரு. கைலாசபதி அவர்களுடைய வீரப்பண்பாடு பற்றிய விளக்கம், விடுதலைப் புலிகளுடைய மாவீரர் தின பண்பாட்டை விளங்க வைக்கின்றது ''இப்படியான வீரப் பண்பாட்டில் சாவுக்கஞ்சாத வீரத்துக்கே பெருமையளிக்கப் படுகின்றது. வீட்டில் செத்து சாக வாழ்வதைவிடப்போரில் மடிவதையே உண்மையான வீரன் விரும்புகின்றான்'' என பேராசிரியர் கைலாசபதி கூறுகின்றார்.

பொதுவாக பழங்கால வீரச் சமுதாயத்திலும் குறிப்பாகப் புறநானூற்றுக் காலச் சமுதாயத்திலும் நிலவிய கருத்துக்கள் தமிழர் சமுதாயத்துக்கிடையில் விடுதலைப் புலிகள் உருவாக்க விரும்பும் வீரப்பண்புக்கு ஒத்ததாகவிருக்கின்றது.

தமது மண்ணுக்காகவும், தமிழ் இனத்துக்காகவும் தமது இன்னுயிரைத் தற்கொடை செய்த போராளிகளைத் தகனஞ் செய்வதற்காக வல்வெட்டித்துறையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள துயிலும் இல்லமும் யாழ்ப்பாணத்தின் மற்றப் பகுதிகளில் அமைக்கப்படவிருக்கும் துயிலும் இல்லங்களும் இக்கருத்துக்கு உதாரணமாயுள்ளன.

இறந்த சாதாரண மக்களுக்கு வழமையாகச் செய்யப்படும் சமய சம்பந்தமான கிரியைகள் போலன்றி, போரில் மாண்ட வீரர்களுக்கு வீர வணக்கம் தெரிவிக்கும் வகையில் செய்யப்படும் புதியவிதமான கிரியை முறை ஒன்றையே விடுதலைப் புலிகள் உருவாக்குகின்றார்கள்.

(முற்றும்)

# காஷ்மீரில் தலையிடுவதை பாக். நிறுத்தவேண்டும்

## பிரிட்டன் கோருமென டக்ளஸ் ஹேர்ட்

(டில்லி)

காஷ்மீர்விடயத்தில் பாகிஸ்தான் குறுக்கிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென தாம் நெருக்குதல் கொடுக்கப் போவதாகப் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. டக்ளஸ் ஹேர்ட் புதுடில்லியில் செய்தியாளர்களின் கூட்டம் ஒன்றில் பேசும்போது தெரிவித்தார்.

பஞ்சாப்பில் தேர்தல் நடைபெறப் போவதாக வந்த செய்தியை அவர் மிகவும் ஆதரித்துப் பேசியதுடன் இத்தேர்த

உரிமைகளை மீறுகிறார்கள் என்றும், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையே பேசி முடிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தீவிரவாதிகளுக்கான ஆயுத பலம், பணபலத்தைக் குறைத்திடும் வாய்ப்புக்களையே ஏற்படுத்துமெனவும் மனித உரிமைகள் மறுக்கப்படுவதாகச் சொல்லப்படும் விடயங்கள் ஒளிவு மறைவின்றி திறந்த மனதுடன் எதிர்த்துச் சமாளிக்கும்கருத்தையே பிரிட்டன் ஆதரிக்கும் எனவும் திரு. டக்ளஸ் ஹேர்ட் தெரிவித்தார்.

# இந்தியா - அமெரிக்கா நட்புறவு வளர்கிறது

## - சரத் பவார்

(டில்லி

# அமெரிக்க தூதர் - சதாம் சந்திப்பு விபரம் வெளியிடுக

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் ஈராக்கியத் தூதுவருக்கும் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைனுக்கும் இடையில் 1990 ஆம்ஆண்டுயூலை மாதம்இடம் பெற்ற சந்திப்பு தொடர்பான விபரங்களை வெளியிடுமாறு அமெரிக்க வெளிநாட்டு திணைக்களத்துக்கு வாஷிங்டன் நீதி மன்றம் ஒன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

குவைத் மீது ஈராக் ஆக்கிரமிப்புச் செய்யுமானால் அதில் தான் தலையிடப் போவதில்லை என அமெரிக்கா ஈராக்கிற்கு அறிவித்ததா? இல்லையா? என்பதை இச் சந்திப்பு விபரங்கள் மூலம் அறியலாம் என தெரிவிக்கப் படுகிறது.

இச்சந்திப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்ட எட்டு ஆவணங்களையும் சமர்ப்பிக்கக் கோரி பொதுப் பிரஜைகள் குழுத்தலைவர் ராஜநாடார் என்பவர் வாஷிங்டன் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இதன் மீது தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம் இந்த ஆவணங்களை வெளியிடுமாறு தீர்ப்பு அளித்துள்ளது.

# ஜூலியன் போலிங்கிற்கு ஒலிம்பிக்கில் இடம் இல்லை

என்பனவற்றையும் இந்தியா கையாண்டு வருகின்றது. இலங்கை திரும்ப விரும்பும் அகதிகள் தொடர்பாக இந்தியா தயாரித்த பட்டியல் ஒரு மோசடியானது எனப் பல மனிதநேய ஸ்தாபனங்களே தெரிவிக்கின்றன.

சிறிலங்காவைப் பொறுத்து, அகதிகளைப் பொறுப்பேற்பதினால், இலங்கை விவகாரத்தில் இருந்து இந்தியாவைத் தள்ளி வைக்கப் பார்க்கின்றது. அத்தோடு, வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகளுக்கென உதவி வழங்கும் நாடுகள் மறுத்துள்ள நிதி உதவிகளை இலங்கை திரும்பும் தமிழ் அகதிகளைக் காட்டிப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதேவேளை, சகல தமிழர் தரப்பும், அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது குறித்து தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளன. உலக மனித நேய அமைப்புக்கள் பல இந்தியாவின் இச்செயற்பாட்டைக்கண்டித்துள்ளன.

ஐ. நா. சாசனத்தின்படி தமது நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் தமது உயிருக்குப் பாதுகாப்பு இன்மை ஏற்பட்டுள்ளது என்று கருதும் பட்சத்தில் மக்கள் உலகின் தான் விரும்பிய எந்தப் பகுதிக்கும், செல்வதற்கு உரிமையுடையவராகின்றார். அவருக்கு அடைக்கலமும், பாதுகாப்பும் கொடுக்க வேண்டியது அந்நாட்டின் கடமையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்தியாவும், சிறிலங்காவும் ஐ. நா. இவ்விதி முறைகளை முற்றாக மீறி அகதிகள் விவகாரத்தில் அரசியல் லாபம் தேடுகின்றன. அகதிகளாகியுள்ள மக்கள், மனித நேய ஸ்தாபனங்களின் எதிர்ப்பு என்பனவற்றையும் மீறி அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இலங்கை திரும்பும் அகதிகள் சொந்த மண்ணிலேயே 'தடை முகாம்களில்' விஷேட அடையாள அட்டையுடன் தங்க வைக்க சிறிலங்கா அரசாங்கம் முற்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஐ. நா. தலையிட்டு இவ்அநீதியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என விடுதலைப்புலிகள் கோரியுள்ளனர். அதாவது தமது மக்களின் உயிருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதே விடுதலைப் புலிகளின் கோரிக்கையின் அடிப்படையாகும். ஆனால், இக் கோரிக்கையை விடுதலைப்புலிகள் விடுத்துத்தான் ஐ. நா. மேற்கொள்ள வேண்டும் என்பதல்ல. உலகிலுள்ள. அடக்கப்படும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது ஐ. நா.சாசனத்தின்படி ஐ, நா'வின்கடமையாகும். ஆகையினால்இலங்கைத் தமிழ் அகதிகள் பலவந்தமாகத்திருப்பி அனுப்பப்படுவதும், சிறிலங்காவின் 'தடை முகாம்களுக்கு' அவர்கள் கொண்டு வரப்படுவதும்தொடர்பாக ஐ.நா. உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும். அடக்கப்படும் ஒரு இனத்தின் உரிமையை ஐ, நா.பாதுகாக்க முன்வர வேண்டும்.

# மயானத்தில் அமைதி எமக்குத் தேவையில்லை

## - ராம்தாஸ்

மயானத்தில் அமைதி எமக்குத் தேவையில்லை; நீதியுடனான சமாதானமே வேண்டும். புராண இதிகாசங்களில் கூட தீங்குகளை இல்லாதொழிக்க இறுதியில் வன்முறையே கையாளப்பட்டது என தமிழக பாட்டாளிமக்கள் கட்சித்தலைவரான எஸ்.ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

பெங்களூருக்கு வாகனங்களில் யாத்திரைசெல்ல முயன்ற வேளை கடந்த வாரம் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்ட ராம்தாஸ் சேலம் மத்திய சிறையிலிருந்து விடுதலையான பின்னர் நிருபர்களுடன் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

தமிழக மக்களை அமைதியாக இருக்குமாறு மாநில அரசாங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. கர்நாடகத்தில் தமிழர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது எவ்வாறு தமிழக மக்கள் பொறுமை காப்பது என்றும் அவர் தெரிவித்தார்.

# பாக. நிறுத்தவேண்டும

## பிரிட்டன் கோருமென டக்ளஸ் ஹேட்

(டில்லி)

காஷ்மீர்விடயத்தில் பாகிஸ்தான் குறுக்கிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென தாம் நெருக்குதல் கொடுக்கப் போவதாகப் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. டக்ளஸ் ஹேல்ட் புதுடில்லியில் செய்தியாளர்களின் கூட்டம் ஒன்றில் பேசும்போது தெரிவித்தார்.

பஞ்சாப்பில் தேர்தல் நடைபெறப் போவதாக வந்த செய்தியை அவர் மிகவும் ஆதரித்துப் பேசியதுடன் இத்தேர்தலில் பங்குகொள்ளமறுப்போர் சுற்காப்பு அற்ற ஒரு நிலையிலேயே இருப்பார்கள் என்றும் தெரிவித்தஅவர், காஷ்மீரிலும் இது மாதிரியான ஒரு நடவடிக்கைதொடங்கப்பட்டால்அது ஒரு முற்போக்கு நடவடிக்கையாகவே அமையுமெனவும் தெரிவித்தார்.

தீவிரவாதிகள்தான் மனித உரிமைகளை மீறுகிறார்கள் என்றும், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையே பேசி முடிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தீவிரவாதிகளுக்கான ஆயுத பலம், பணபலத்தைக் குறைத்திடும் வாய்ப்புக்களையே ஏற்படுத்துமெனவும் மனித உரிமைகள் மறுக்கப்படுவதாகச் சொல்லப்படும் விடயங்கள் ஒளிவு மறைவின்றி திறந்த மனதுடன் எதிர்த்துச் சமாளிக்கும்கருத்தையே பிரிட்டன் ஆதரிக்கும் எனவும் திரு. டக்ளஸ் ஹேல்ட் தெரிவித்தார்.

# இந்தியா - அமெரிக்கா நட்புறவு வளர்கிறது

## - சரத் பவார்

(டில்லி

அமெரிக்காவும் இந்தியாவும் வெளிப்படையான உறவுகளை அமைத்துக் கொள்ளும் வகையில் முன்னேறிக் கொண்டிருப்பதாக இந்திய பாதுகாப்பமைச்சர் சரத் பவார் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சரத் பவார், தற்போதைய சூழ்நிலை மூலம் நிபுணர்கள் பல்வேறு துறைகளில் மேலும் அர்த்தமுள்ள வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காஷ்மீரிய பிரச்சினை குறித்து வாஷிங்டன் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரபாத் விஜயம் பிற்போடப்பட்டது

பாலஸ்தீன விடுதலைஇயக்கத் தலைவர் யாஸீர் அரபாத்தின் இலங்கை விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தவாரம் அரபாத் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தது தெரிந்ததே.

இலங்கைக்கும், ஆசியபிராந்தியத்திற்கும் மேற்கொள்ளவிருந்த விஜயத்தை அவர் ஒத்திப்போட்டுள்ளாரென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேர்னாட் திலகரெட்னா அறிவித்தார்

# கர்நாடக வன்முறை; ஆராய விசாரணை கமிஷன்

காவிரி நீர்ப்பிரச்சினை தொடர்பாகக் கர்நாடக மாநிலத்தில் சென்ற மாதம் நடந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் அதற்குக் காரணமானவர்கள் குறித்தும் விசாரணை நடாத்தி அரசுக்கு அறிக்கை ஒன்றைச்சமர்ப்பிக்க கர்நாடக உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி என் டி. வெங்கடேஷ் தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்றைக் கர்நாடக மாநில அரசு அமைத்துள்ளது.

வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றபோது அரச அதிகாரிகள் உரிய நேரத்தில் முன் எச்சரிக்கை எடுக்கத்தவறிவிட்டார்களாஎன ஆராய்ந்து ஆறு மாதத்திற்குள் அறிக்கைசமர்ப்பிக்குமாறு விசாரணைக் கமிஷனை கர்நாடக மாநில அரசு கேட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

# பாடசாலை மாணவர்களுக்கு அறிவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினரால் நடாத்தப்படவுள்ள மாணவர்களுக்கான அறிவியல் கருத்தரங்குகள் இன்று 20 ஆம் திகதி திங்கள் முதல் ஆரம்பமாகவுள்ளன.

'சூழல் மாசடைதல்' என்ற விடயம் குறித்து யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை தலைவர் செ. பாலசந்திரன், யாழ். இளவாலை சென்கென்றிஸ் பாடசாலையில் பிற்பகல் 1.30 மணிக்கும்

'வளர்ந்துவரும் உலகமும் விஞ்ஞான தொழில் நுட்பமும்'' என்றதலைப்பில் யாழ். திறந்தபல்கலைக்கழக உதவிப் பணிப்பாளர் மு. தில்லைநாதன் யாழ். சண்டிலிப்பாய் இந்து. ம. வித்தியாலயத்தில் 1.30 மணிக்கும்,

'சார்க் நாடுகள்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கா. குகபாலன் யாழ். இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் 1.30 மணிக்கும் உரையாற்றவுள்ளனர்.

# ஒத்திவைப்பு

யாழ். கல்வித் திணைக்கள ஆசிரியர் இடமாற்றச் சபையின் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

# பஞ்சாப் தேர்தலை அகாலிதள் புறக்கணிப்பு

(டில்லி)

பஞ்சாப் சட்ட சபை, மக்களவை தேர்தல்களில் தாம் கலந்துகொள்வதில்லை என அகாலிதள் கட்சியும் ஏனைய இரண்டு குழுக்களும் தெரிவித்துள்ளன.

பஞ்சாப்பில் அடுத்தமாதம் 19ஆம் திகதி தேர்தல்கள் நடைபெற உள்ளதாக இந்திய தலைமைத் தேர்தல் அதிகாரி சேஷன் அறிவித்துள்ளார்.

பஞ்சாப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் தேர்தல்களை நடாத்துவதில் அர்த்தமில்லை என அக்கட்சிகள் தெரிவித்துள்ளன என தெரிய வருகிறது.

அமெரிக்காவின் முன்னாள் ஈராக்கியத் தூதுவருக்கும் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைனுக்கும் இடையில் 1990 ஆம்ஆண்டுயூலை மாதம்இடம் பெற்ற சந்திப்பு தொடர்பான விபரங்களை வெளியிடுமாறு அமெரிக்க வெளிநாட்டு திணைக்களத்துக்கு வாஷிங்டன் நீதி மன்றம் ஒன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

குவைத் மீது ஈராக் ஆக்கிரமிப்புச் செய்யுமானால் அதில் தான் தலையிடப் போவதில்லை என அமெரிக்கா ஈராக்கிற்கு அறிவித்த இச் சந்திப்பு விபரங்கள் மூலம் அறியலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்ட எட்டு ஆவணங்களையும் சமர்ப்பிக்கக் கோரி பொதுப் பிரஜைகள் குழுத்தலைவர் ராஜநாடார் என்பவர் வாஷிங்டன் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இதன் மீது தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம் இந்த ஆவணங்களை வெளியிடுமாறு தீர்ப்பு அளித்துள்ளது.

# ஜூலியன் போலிங்கிற்கு ஒலிம்பிக்கில் இடம் இல்லை

(கொழும்பு)

ஐந்தாவது 'சவ்' விளையாட்டுப் போட்டிகளில் இலங்கைக்கு ஐந்து தங்கப்பதக்கங்களையும் இரண்டு வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றுக்கொடுத்த ஜூலியன் போலிங் ஒலிம்பிக் விழாவில் பங்கேற்கும் இலங்கைக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இது குறித்து ஜூலியன் போலிங் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில்:-

''எத்தனை தங்கப் பதக்கங்களை எடுக்க முடியுமோ அத்தனை தங்கப்பதக்கங்களை எடுக்க முயற்சிக்குமாறு தான் 'சாவ்' போட்டிகளின் போது எம்மிடம் கேட்கப்பட்டது. இதனால் நான் ஆறு தனிப்பட்ட போட்டிகளிலும் மூன்று அஞ்சல் போட்டிகளிலும் பங்கு பற்ற வேண்டியிருந்தது. இதற்காக எம்மைவிட நாட்டுக்கு முன்னுரிமை கொடுத்து சந்தியமானளவு தங்கப்பதக்கத்தைப்பெற்றுக்கொடுத்தோம். ஆனால் இப்போது அவர்கள் விளையாட்டில் நோங்களை பற்றி பேசுகிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.

''நேரங்கள்தான் தேவை என்றிருந்தால் நம் இரண்டு அல்லது மூன்று விளையாட்டுக்களில் கவனம் செலுத்தியிருப்போம். எனது அதிவிருப்பத்திற்குரிய விளையாட்டுக்களில் அக்கறையெடுத்து சிறப்பாகச் செய்திருப்பேன்'' என்றும் அவர் விளக்கம் அளித்தார்.

# உஸ்பெஸ்கிஸ்தானில் விலையேற்றத்திற்கு எதிராக மாணவர் ஆர்ப்பாட்டம்

(மொஸ்கோ)

உஸ்பெஸ்கிஸ்தான் தலைநகரில் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

முன்னாள் சோவியத் குடியரசுகளில் தொடங்கப்பட்டபுதிய சீர்திருத்தங்களுடன் தொடர்புடைய இந்த விலை உயர்வை எதிர்த்தே இம் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர்.

உணவுப் பொருள்களின் விலை உயர்த்தப்பட்டுவிட்டதாகவும் அத்தியாவசியப் பண்டங்களுக்கு அதிக தட்டுப்பாடுகள் நிலவுவதை அடுத்தே மேற்படி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

இந்த ஆர்ப்பாட்டங்களை அடங்க பொலிஸார் முற்பட்ட போது ஏற்பட்ட மோதலில் இரு மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஐரிஸில் 8பேர் பலி

வடஅயர்லாந்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 8 கட்டடத் தொழிலாளிகள் பலியாகினர். சிலர் காயமடைந்தனர்.

இராணுவத்தினருக்கான கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருந்த தொழிலாளிகளே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த குண்டு வெடிப்புக்கு ஐரிஸ் தீவிரவாதிகளே காரணம்என நம்பப்படுகிறது. முன்னரும் இவ்வாறான இராணுவ கட்டடக் குண்டு தாக்குதல்களை ஐரிஸ் தீவிரவாதிகள் மேற்கொண்டுள்ளனர் எனவு தெரிவிக்கப்படுகிறது.

## அரசியல் நோக்கத்திற்காக ‘டடா’ பயன்படுத்தவில்லை -ஜெயலலிதா

(சென்னை)

‘எனது அரசியல் நோக்கங்களை அடைவதற்காக பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடைச் சட்டத்தையோ (டடா) அல்லது வேறு எந்த சட்டத்தையுமோ நான் தவறாகப் பயன்படுத்தவில்லை’ என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

வடஆற்காடு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

‘எனது அதிகாரத்தை நான் துஷ்பிரயோகம் செய்திருந்தால் அத்தகைய ஒரு சம்பவத்தை சுட்டிக் காட்டுமாறு சவால் விடுகின்றேன்’ என்றும் அவர் சொன்னார்.

## தமிழ் நாட்டில் தொண்டமான்

(சென்னை)

அமைச்சர் எஸ். தொண்டமான் ஐந்து நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் திருநெல்வேலி வந்தார். அவரின் தமிழ்நாடு விஜயம் குறித்து உத்தியோக பூர்வமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## கர்- தமிழர்கள்விவகாரம் மத்திய அரசு பாராமுகம் -கருணாநிதி

(சென்னை)

கர்நாடக தமிழர்களின் விடயத்தில் மத்திய அரசு பாராமுகம் காட்டியுள்ளது என்றும் நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்த தமிழக அரசும் தவறி விட்டது என்றும் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி குற்றஞ் சாட்டியுள்ளார்.

கர்நாடக மாநிலத்தில் தமிழர்கள் தொடர்ந்தும் துன்பங்களுக்குள்ளாக்கப் படுவதனால் உருவாகும் சூழ்நிலையை தி. மு. க. வினால் சகித்துக் கொள்ள முடியாது என்றும் இதனால் அடுத்த நடவடிக்கைகள் குறித்து ஆராய தி. மு. க. நிர்வாகக்குழு ஆலோசனை நடத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

## அ. தி மு க அரசு ‘டடா’வை பழிவாங்கபயன்படுத்துகிறது

(சென்னை)

அ.தி.மு.க.அரசாங்கம் பழிவாங்கும் நோக்கத்துடனேயே ‘டடா’ச்சட்டத்தை பயன்படுத்துகிறது என்று இந்திய கம்யூனிசகட்சியின் தமிழ்நாடுகிளை கண்டித்துள்ளது.

முன்னாள் தி.மு.க. அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசனும், அவரது கணவர் திரு ஜெகதீசனும் டடாச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ள கம்யூனிஸ்ட் கிளை இவ்வாறு குறிப்பிட்டுள்ளது

சுப்புலட்சுமி கைதுசெய்யப்பட்டது அ. தி. மு. க. வின் நடவடிக்கைகளை மேலும் உறுதிப்படுத்துகின்றதுஎன்றும் பயங்கரவாத ஒழிப்புச் சட்

### கம்யூ. கட்சிகண்டனம்

டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்யுமாறும் டடாச் சட்டத்தை ரத்துச் செய்யுமாறும் இக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

## லெபனான், சிரியா பேச்சுக்களை புறக்கணிக்கும்

(லண்டன்)

மேற்கூறிய அடுத்த சுற்று சமாதான பேச்சு வார்த்தைகளை சிரியாவும் லெபனானும் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

வாஷிங்டனில் நடைபெறும் இருதரப்பு பேச்சுக்களினால் ஆக்கபூர்வ விளைவுகள் எதுவும் ஏற்படாத வரையிலும் பல தரப்பு பேச்சு சமாதானப் பேச்சுக்களுக்கு பிரதிநிதிக் குழுவை அனுப்பப் போவதில்லை என்றும் இந்த இருநாடுகளும் தெரிவித்துள்ளன.

அத்துடன் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கு இஸ்ரேல் மறுத்து வருவதால் மேற்காசிய சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதில் அர்த்தமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா - உக்ரேயின் இராஜரீக உறவு

இந்தியாவும் உக்ரேனும் தங்களிடையே ராஜீய துறையிலான உறவுகளைஏற்படுத்திக் கொள்ள வகை செய்யும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன

இவ் ஒப்பந்தத்தில் இந்திய மத்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்சிற்றும் உக்ரேனிய வெளியுறவுத் துறை அமைச்சர் அனர்தோலி ஹெலின்ஹோலும் கைச்சாத்திட்டனர்

இருநாடுகளினதும் உயர் மட்டத் தலைவர்களிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது

அடுத்த சிலமாதங்களில் இந்தியா வரவிருக்கும் உக்ரேயின் ஜனாதிபதியும் இந்திய பிரதமர் நரசிம்மராவும் புதிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய அமைச்சர் ஜப்பான் பயணம்

(டில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி ஆறு நாள் அரச முறைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு ஜப்பான் சென்றுள்ளார். ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் ஆரம்பிக்கப்பட்டதன் நாற்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இவரது விஜயம் அமைந்துள்ளது. அவரது விஜயத்தின்போது ஜப்பானிய பிரதமர் உட்பட அரசுத் தலைவர்கள் மற்றும் முக்கிய பிர

## முக்கிய அறிவித்தல்

# திருமலையில் அகதிகளை தயாரெட்னா வரவேற்பாராம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் முதலாவது தொகுதி அகதிகளை திருக்கோணமலை துறைமுகத்தில் வரும் 22 ஆம் திகதி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரெட்னா வரவேற்பார் என்று இந்த அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தயாரெட்னாவுடன் மேலும் பல அமைச்சர்களும், அமைச்சு அதிகாரிகளும் அவர்களை வரவேற்பார்கள் என்றும்,

முதலாவது குழுவில் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகத்தர்களே வருகின்றனர் என்றும்,

இவர்களில் வசிப்பிட வசதி இல்லாதவர்கள் உப்புவெளியில் உள்ள நலத்துறை நிலையத்தில் வைத்து பராமரிக்கப்படுவார்கள் என்றும்,

அரசாங்க ஊழியர் ஒவ்வொருவருக்கும்தலா ஆயிரம் ரூபாய் முற்பணம் வழங்கப்படுமென்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை சென்னையிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை திருக்கோணமலைக்கு ஏற்றிச் செல்லும்கப்பல் இன்று காலை சென்னையிலிருந்து புறப்படவுள்ளது. முதல் தொகுதியாகஎண்ணூற்றிநாற்பத்தைந்துபேர் இக்கப்பலில் ஏற்றிச் செல்லப்படவுள்ளனர். சிதம்பரனார் மாவட்டம் குருத்துவார்பட்டியிலுள்ள அகதி முகாமிலிருந்து பேருந்துகள் மூலம்நேற்று சென்னைக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக ஆணையாளர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ். ரக்காவீதியில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர்கழுத்தில் கயிறுபோட்டுச்சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

ராயப்பு (வயது 78) என்ற இந்த வயோதிபரின் மரணம் தொடர்பாகத் தமிழீழக் காவல்துறையினர் விசாரணை செய்துவருகின்றனர். (க)

## அரசியல்

விளைவாகத்தான் இன்றைய நிலைஉருவாகியுள்ளதுஎன்றும்

அரசியல்தீர்வுநாட்டைக்கூறாக்கிவிடும்என்றுநம்புகிறார்கள். அதனால்தான் இராணுவத் தீர்வை நாடுகிறார்கள் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்குக் காலம் இன்னும் கடந்து விடவில்லை என்றும்-

ஆகவே எதிர்க்கட்சிகளும், அரசும் சேர்ந்து மேலும் காலதாமதத்தால் இனப்பிரச்சினைக்கு உண்மையான அதிகாரப் பரவலாக்கல் அல்லது சமஷ்டி முறையில் தீர்வைக் காணும்படி வேண்டுகிறோம் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவி

வர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். குருநாகலைச் சேர்ந்த பாடசாலையில் கல்வி கற்கும் பிரியங்கா குமாரி ஹேரத் (16) என்பவரே இவ்வாறு கொல்லப்

## அடுத்தமாத நடுப்பகுதியில் எழுதுவினைஞர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் எழுதுவினைஞர்களுக்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடாத்தப்படவிருக்கிறது.

மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள்கள் வந்து சேராமையாலேயே காலதாமதமாகி வருகின்றது.

மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள்கள் இங்கு வரும் கப்பல் மூலம் எடுத்துவரப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க)

## பாராளுமன்றம் நாளை கூடும்

1992 ஆம் ஆண்டில் பாராளுமன்றம் முதன் முறையாக நாளை செவ்வாய்க்கிழமை கூடும் என பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சு அறிவித்துள்ளது.

நாளை முதல் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு பாராளுமன்றம் கூடுமென்றும், வரும் வியாழக்கிழமை 23 ஆம்திகதி அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதம் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளது.

## இஸ்ரேல் ஆளும் கட்சி பெரும்பான்மை இழந்தது

இஸ்ரேல் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு இரு சிறிய வலதுசாரி கட்சிகள் வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டது.

120 அங்கத்தினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் இரு கட்சிகளையும் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் விலகிக் கொண்டதையடுத்து பிரதமர் ஷாமீரின் அரசு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ளது.

இதைத்தொடர்ந்து தேர்தல் விரைவில் வரலாம் எனச் செய்திகள்தெரிவிக்கின்றன.

மேற்காசிய சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்கே இந்த நடவடிக்கை.

## ‘சுபீட்ச நூலகம்’ திறப்பு

(உரும்பராய்)

உரும்பராய் சுபீட்ச சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தினரால் உரும்பராயில் ‘சுபீட்ச நூலகம்’ என்ற பொது நூலகம் இன்று மாலை 3.00 மணியளவில் திறந்து வைக்கப்பட உள்ளது.

யாழ்.மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் இந்த நூலகத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைப்பார். சிறுவர் பகுதி, உடனுதவும் பகுதி இரவல் கொடுக்கும் பகுதி, ஆகியவற்றை இந் நூலகம் கொண்டிருக்கிறது. அத்துடன் சுபீட்ச கலைக்கூடம் மற்றும் மேற்படி சங்கத்தின் அலுவலகம் போன்றவையும் இன்று திறந்து வைக்கப்படவிருக்கின்றன. (க)

## தைப்பூசத்தை முன்னிட்டு கடைகள் இன்று பூட்டு

(யாழ்ப்பாணம்)

தைப்பூசதினத்தை முன்னிட்டு சகல வர்த்தக நிலையங்களும் இன்று மூடப்பட்டிருக்கும் என்றும் வர்த்தக ஊழியர்களுக்கு இன்று விடுமுறை தினம் என்றும் வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஊழியர்களுக்கு இன்று விடுமுறை விடும்படி அனைத்து வர்த்தக நிலையங்களையும் இச்சங்கம் கேட்டிருக்கிறது. (க)

## கண்ணிவெடியில் சிக்கி யானைகள் காயம்

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த பல்வேறு மிதிவெடிகளில் சிக்கி முப்பதுக்கும் மேற்பட்ட காட்டு யானைகள் இறந்திருப்பதாக சுற்றுப்புறச் சூழல் குறித்து ஆய்வு செய்யும்குழுவொன்றுகொழும்பில் தகவல் வெளியிட்டுள்ளது. யானைகளைப் பாதுகாப்பதற்கான ஆய்வில் ஈடுபட்டவர்களால் அம்பாறை, மட்டக்களப்பு திருக்கோணமலை பகுதிகளில் மேலும் பல காட்டு யானைகள் காயமடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையில் சுமார் முப்பதாயிரம் காட்டு யானைகள் இருந்ததாகவும், தற்போது சுமார் இரண்டாயிரத்து ஐநூறு காட்டு யானைகள் வரையிலேயே வாழ்வதாகவும் அக்குழு மேலும் கூறியுள்ளது.

## போரூட் உதவி

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மீனவர்களுக்கு ‘‘போரூட்’’ நிறுவனத்தினால் சுமார் பதினொரு லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவிருக்கின்றன. (க)

## உள்நாட்டு, சர்வதேச தொலைத் தொடர்புகள்

லான உறவுகளைஏற்படுத்திக் கொள்ள வகை செய்யும் ப்பந்தம் ஒன்றில் கைச்சாத்தி திட்டுள்ளன

இவ் ஒப்பந்தத்தில் இந்திய மத்திய வெளியுறவுச் செய லாளர் ஜே. என். டிக்சிற்றும் உக்ரேனிய வெளியுறவுத் துறை அமைச்சர் அனர்தோலி ஹெலின்ஹோலும் கைச்சாத் திட்டனர்

இருநாடுகளினதும் உயர் மட்டத் தலைவர்களிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை களின் பின்னர் இந்த ஒப்பந் தம் ஏற்பட்டுள்ளது

ஜனாதிபதியும் இந்திய பிரத மர் நரசிம்மராவும் புதிய ஒப் பந்தங்களில் கைச்சாத்திட உள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

தானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதில் அர்த்த மில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# இந்திய அமைச்சர் ஜப்பான் பயணம்

(டில்லி)

இந்திய வெளியுறவு அமைச் சர் மாதவ்சிங் சோலங்கி ஆறு நாள் அரச முறைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு ஜப் பான் சென்றுள்ளார். ஜப்பா னுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் ஆரம் பிக்கப்பட்டதன் நாற்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இவரது விஜயம் அமைந்துள்ளது. அவரது விஜ யத்தின்போது ஜப்பானிய பிர தமர் உட்பட அரசுத் தலை வர்கள் மற்றும் முக்கிய பிர முகர்களைச் சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி. பீடிகளைப் போல் ஒரு சில நபர்களால் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி. ஜி. பீடிகளை விற்பனை செய்வதாக அறிய வந்துள்ளோம். அசல் ஆர். வி. ஜி. பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி. பீடி விற் பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டு கின்றோம். போலி பீடி விற்பனையாளர் பற்றிய

தகுந்த தகவல் தருபவர்களுக்கு
தக்க சன்மானம் வழங்கப்படும்.

**ஆர். வி. ஜி. நிர்வாகம்**

58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2099)

## மரண அறிவித்தல்

### திருமதி நவமணி கந்தசாமி

திருமதி நவமணி கந்தசாமி 17-01-1992 அன்று காலமானார். அன்னார் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளிநொச்சி 4 ஆம் வாய்க்காலை வசிப் பிடமாகக் கொண்டவரும் காலம் சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 19-01-1992 காலை 10.00 மணியள வில் நடைபெற்று, கிளிநொச்சி இந்து மயானத்தில் தக னம் செய்யப் பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

க. முருகையா (மகன்)

D-4, கிளிநொச்சி.

### குண்டுவீச்சால்

டங்களாக நாட்டின் பொரு ளாதார வளர்ச்சிக்கு நாம் உழைத்து வருகிறோம். நாம் எந்த சக்திக்கும் பயந்து அஞ்சி தலைகுனியமாட்டோம்.

இந்த நாட்டை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும் சிறிலங்கா சுதந் திரக்கட்சி அரசாங்கமும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்களின் முன் னேற்றத்திற்காக என்னென் னவோ செய்தன. ஆனால் தோட்டப்பகுதி இளைஞர் களுக்கு அந்த அரசாங்கங்கள் எதுவும்செய்ய முன்வரவில்லை

அரசாங்கத்திற்கும் புலி களுக்கும் இடையே கடந்த எட்டு வருடங்களாக நடை பெற்றுவரும் யுத்தத்தை நிறுத்தி நாட்டில் சுபீட்சமும் அபிவிருத்தியும் ஏற்படவேண் டும் என்ற ஒரே குறிக்கோளு டனேயே யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் சமரசம் பேச நான் தயாரானேன்.

ஆனால் குறுகிய மனப் பான்மை கொண்ட சில சக்தி களும் அரசியல் இலாபம்பெற முயலும் சில பிற்போக்குவாதி களும் இதற்கு தடையாக இருக்கிறார்கள். அமைதிக்காக உழைக்க முன்வந்த எனக்கு இன்று பயமுறுத்தல், எச்சரி க்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

### மருத்துவ

முன்தினம் (18 ஆம் திகதி) பருத்தித்துறையூடாக போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். புங்குடு தீவில் மருத்துவ வசதி சிறிதும் கிடையாதென்றும் நோய்கள் ஏற்பட்டு அவற்றை தடுக்க முடியாமல் அங்கு இதுவரை பதினைந்திற்கும் மேற்பட்ட வயோதிபர்கள் உயிரிழந்துள் ளனர் என்றும் இவ்விருவரும் .தெரிவித்துள்ளனர். (22) (43)

### அரசியல்

விளைவாகத்தான் இன்றைய நிலைஉருவாகியுள்ளதுஎன்றும் அரசியல்தீர்வுநாட்டைக்கூறா க்கிவிடும்என்றுநம்புகிறார்கள். அதனால்தான் இராணுவத் தீர்வை நாடுகிறார்கள் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர் வைக் காண்பதற்குக் காலம் இன்னும் கடந்து விடவில்லை என்றும்-

ஆகவே எதிர்க்கட்சிகளும், அரசும் சேர்ந்து மேலும் காலதாமதத்தால் இனப்பிரச் சினைக்கு உண்மையான அதி காரப் பரவலாக்கல் அல்லது சமஷ்டி முறையில் தீர்வைக் காணும்படி வேண்டுகிறோம் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

### வளலாய்

இத்தாக்குதலில் ஏ. கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கி ஒன்றும் அதற்குரிய ரம் ரவைக் கூடு ஒன்று 7.61 ரக நடுத்தர ரவைகள்-100 என் பனவும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதைத் தொடர்ந்து சிறி லங்கா இராணுவத்தினர் பலத்த எறிகணைத் தாக்குத லும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

### 150 பேர்

தேச செஞ்சிலுவைச் சங்கத்தி னரால் நேற்று பரிசோதனை இடப்பட்டது. அவற்றில் உண வுப்பண்டங்களும், சவர்க்கார வகைகளும் அதிகமாக இருந் தன. நெடுந்தீவுக்கு செல்லும் சர்வதேச செஞ்சிலுவைச்சங் கத்தினர் அங்கிருந்து யாழ்ப் பாணம் வரும் மக்களையும் அழைத்துவருவது தெரிந்ததே.

மேலும், இராணுவ நடவ டிக்கை காரணமாக நெடுந் தீவில் சிக்கியிருக்கும் 46 ஆசிரி யர்களுக்குரிய நவம்பர், டிசம் பர் மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவையும் நெடுந் தீவுக் கொத்தணி அதிபர் பா. அன்ரனி எடுத்துச்செல்கிறார். (75)

## ‘ருக்மிணி நர்த்தனாலயம்’

## புதிய வகுப்பு ஆரம்பம்

இன்று 20-01 92- தைப்பூசத் தினத்தன்று பரதநாட் டிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

இடம்: 365, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(கம்பன் கோட்டம் அருகில்)

நேரம்: மாலை 4-30மணி

-நிர்வாகி

(2123)

# பெரும்பான்மை இழந்தது

இஸ்ரேல் பாராளுமன்றத் தில் ஆளும் கட்சிக்கு இரு சிறிய வலதுசாரி கட்சிகள் வழங்கி வந்த ஆதரவை வில க்கிக் கொண்டது.

120 அங்கத்தினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் இரு கட்சிகளையும் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும்விலகிக் கொண்டமையடுத்து பிரதமர் ஷாமீரின் அரசு பாராளுமன் றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ளது.

இதைத்தொடர்ந்து தேர்தல் விரைவில் வரலாம் எனச் செய்திகள்தெரிவிக்கின்றன.

மேற்காசிய சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்பு வதற்கே இந்த நடவடிக்கை.

### மாணவி

வர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள் ளார். குருநாகலைச் சேர்ந்த பாடசாலையில் கல்வி கற்கும் பிரியங்கா குமாரி ஹேரத் (16) என்பவரே இவ்வாறு கொல்லப் பட்டவராவர்.

பஸ்சினால் இறங்கி சகமாண விகளுடன் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த போது பின்புறமாக வந்த இனந்தெரி யாத ஒரு நபர் இவரை கத்தி யால் குத்தினார் என தெரிய வருகிறது. இது காதல் தொடர் பான விவகாரமாக இருக் கலாம் என பொலிஸார் சந் தேகிக்கின்றனர்.

### சிறிலங்காவிற்கு

காங்கிரீட் சிலிப்பர் கட்டை கள் தயாரிக்கும் தொழிற் சாலையொன்று நிறுவுவது பற்றியும் இந்தியா பரிசீலித்து வருவதாகத் தெரியவருகிறது.

### வி. எஸ் ஓவிடம்

பொலிஸ்அதிகாரிகளும், மனித உரிமை அமைப்பு அதிகாரி களும், எதிர்க்கட்சியினரும் கண்டித்திருக்கிறார்கள் என் றும் பாதுகாப்பு அமைச்சுதெரி வித்துள்ளது.

### பாராளு

குடியேற்றங்கள் அமைப்பதை நிறுத்துமாறும், எக்காரணம் கொண்டும் இன அடிப்படை யில் பாடசாலைகளை ஸ்தா பிக்கக் கூடாது என்று அர சைக்கோருவதென்றும் தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன

யானைகள் வரையிலேயே வாழ்வதாகவும் அக்குழு மேலும் கூறியுள்ளது.

### போரூட் உதவி

சிறிலங்கா இராணுவ நட வடிக்கையால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மீனவர்களு க்கு ‘‘போரூட்’’ நிறுவனத் தினால் சுமார் பதினொரு லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங் கப்படவிருக்கின்றன. (க)

## உள்நாட்டு, சர்வதேச தொலைத் தொடர்புகள்

1. உள்நாட்டுத் தந்தி
(24 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)

2 வெளிநாட்டுத் தந்தி
(30 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)

3. **FAX** (ஃபக்ஸ்)

❋ உள்ளூர் செய்திகள்
(24 மணித்தியாலங்களில் சேரும்)

❋ வெளிநாட்டுச் செய்திகள்
(24 மணித்தியாலங்களில் சேரும்)
(செய்திகள் A4 அளவு தாளில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்)

4. **TELEX** (ரெலெக்ஸ்)
(24 மணித்தியாலங்களில் சேரும்)

5. தொலைபேசி - செய்தி
(120 மணித்தியாலங்களில்) (5 நாட்களின் பின் பதிலுடன் அறிவிக்கப்படும்)

❋ அவசர (URGENT) தொலைபேசிச்செய்தி
(பதிலுடன் 2நாட்கள்) (48 மணித்தியாலங்களில்)

6. ரேடியோ அல்லது பத்திரிகை விளம்பரங்கள்

❋ மரண அறிவித்தல்கள்
(2 நாட்கள்)

❋ பிறந்தநாள் வாழ்த்துக்கள் போன்றவை
(3 நாட்கள்)

**BEACON**

**தொலைத்தொடர்புகள்,**

380, ஆஸ்பத்திரி வீதி,
ஸ்ரேசன் சந்தி,
யாழ்ப்பாணம். (சி/3813)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது